பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை
16 07 2025 6 30
புதன்கிழமை மாலை

## மாநிலச் செய்திகள்

### தலைப்புச் செய்திகள்

1. நாடுமுழுவதும் 100 மாவட்டங்களில் வேளாண் உற்பத்தியை அதிகரிக்க வகை செய்யும் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
2. இந்த திட்டம் வரவேற்கத்தக்கது என்றும் இதன்மூலம் ஒரு கோடியே 70 லட்சம் விவசாயிகள் பயனடைவார்கள் என்றும் மத்திய இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் கூறியுள்ளார்.
3. தமிழகத்தில் ஆட்சிமாற்றம் ஏற்பட வேண்டும் என்று மக்கள் விரும்புவதாக பிஜேபி தெரிவித்துள்ளது.
4. நீலகிரி, கோவை, தேனி, தென்காசி மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.
5. ஆசிய ஜூனியர் ஜூடோ போட்டியில் இந்தியா 5 தங்கம், 4 வெள்ளி, 2 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

### இனி விரிவான செய்திகள் ---

நாடுமுழுவதும் 100 மாவட்டங்களில் வேளாண் உற்பத்தியை அதிகரிக்க வகை செய்யும் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இன்று புதுதில்லியில் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்த தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ், நடப்பாண்டு தொடங்கி அடுத்த 6 ஆண்டுகளுக்கு இந்த திட்டம் செயல்படுத்தப்படும் என்று கூறினார்.

நாடுமுழுவதும் வேளாண் சாகுபடி குறைவாக உள்ள 100 மாவட்டங்களில் இந்த திட்டம் செயல்படுத்தப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்த திட்டத்தை கண்காணிப்பதற்கென தேசிய, மாநில மற்றும் மாவட்ட அளவில் குழுக்கள் ஏற்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

நவரத்னா அந்தஸ்த்து பெற்ற பொதுத் துறை நிறுவனங்களுக்கான முதலீட்டு நெறிமுறைகளிலிருந்து நெய்வேலி நிலக்கரி கழகத்திற்கு சிறப்பு விலக்கு அளிப்பதற்கும் இக்கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியை அதிகரிக்க வகை செய்யும் திட்டங்களுக்கும் இக்கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டதாக அவர் கூறினார்.

சர்வதேச விண்வெளி நிலையத்தில் ஆய்வினை முடித்துக் கொண்டு வெற்றிகரமாக பூமிக்கு திரும்பிய இந்தியாவின் சுபான்சு சுக்லாவுக்கு அமைச்சரவைக் கூட்டத்தில் பாராட்டு தெரிவிக்கப்பட்டதாகவும் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

இதற்கிடையே வேளாண் உற்பத்தியை அதிகரிக்க வகை செய்யும் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது வரவேற்கத்தக்கது என்று தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இதன் மூலம் ஒருகோடியே 70 லட்சம் விவசாயிகள் பயனடைவார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

விவசாயிகளின் நலனுக்காக 11 துறைகள் வாயிலாக தற்போது செயல்பாட்டில் உள்ள 36 திட்டங்களை ஒருங்கிணைத்து வருடத்திற்கு 24 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

வேளாண் உற்பத்தி குறைவாக உள்ள மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகளின் வளமான எதிர்காலத்தை இத்திட்டம் உறுதி செய்யும் என்றும் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார்.

>><><><<

உணவு தானிய உற்பத்தி கடந்த 11 ஆண்டுகளில் 81 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது என்று மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சவுகான் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் இந்திய வேளாண் ஆராய்ச்சி குழுமத்தின் நிறுவன தின நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

பழங்கள் மற்றும் காய்கறிகள் உற்பத்தி 75 மில்லியன் டன்னாக அதிகரித்துள்ளது என்று அவர் கூறினார்.

பால் உற்பத்தி 1 கோடியே 2 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது என்றும் திரு சிவராஜ் சிங் சவுகான் தெரிவித்தார்.

>><><><<

ஆசிரியர்களின் கருத்துக்களின் அடிப்படையிலேயே பள்ளி கல்வித் துறை சார்பில் புதிய திட்டங்கள் செயல்படுத்தப்படுவதாக அத்துறைக்கான அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி கூறியுள்ளார்.

செங்கல்பட்டு மாவட்டம் வண்டலூர் அருகே தலைமையாசிரியர்கள் உடனான ஆய்வுக் கூட்டத்தில் பங்கேற்று அவர் பேசினார்.

>><><><<

அஇஅதிமுக – பிஜேபி கூட்டணியை கண்டு திமுக அஞ்சுவதாக அஇஅதிமுக பொதுச் செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

இன்று கடலூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தங்கள் கூட்டணியில் மேலும் சில கட்சிகள் இடம்பெறும் என்றார்.

அஇஅதிமுக எந்த கட்சியுடனும் கூட்டணி வைத்துக் கொள்ளக்கூடாது என்று திமுக தலைவரும், முதலமைச்சருமான திரு மு க ஸ்டாலின் எண்ணியதாக அவர் கூறினார்.

சட்டப்பேரவைத் தேர்தலில் தங்கள் கூட்டணியே வெற்றிபெறும் என்றும் திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

>><><><<

பீகாரை போல் தமிழகத்திலும் வாக்காளர் பட்டியலை சரிபார்ப்பதற்கு கோரிக்கை விடுக்கவுள்ளதாக பிஜேபி மாநில தலைவர் திரு நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

இன்று திருநெல்வேலியில் பிஜேபி வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

தமிழகத்தில் ஆட்சிமாற்றம் ஏற்பட வேண்டும் என்று மக்கள் விரும்புவதாக அவர் தெரிவித்தார்.

சட்டப்பேரவைத் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெறும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

அஇஅதிமுக பொதுச் செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி மேற்கொண்டு வரும் பிரச்சாரத்திற்கு பொதுமக்களிடையே வரவேற்பு கிடைத்துள்ளதாகவும் திரு நயினார் நாகேந்திரன் கூறினார்.

>><><><><<

நாட்டிலேயே குறைந்த எடைகொண்ட வீல்சேரை சென்னை ஐஐடி உருவாக்கியுள்ளதாக அதன் இயக்குநர் திரு காமகோடி கூறியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

>><><><><<

நீலகிரி, கோவை, தேனி, தென்காசி மாவட்டங்களின் ஒருசில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக் கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

>><><><><<

<u>மாவட்டச் செய்திகள்</u>

வேலூர் அருகே ஸ்ரீபுரத்தில் உள்ள தங்கக்கோயிலில் தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி இன்று சாமி தரிசனம் செய்தார்.

-----------------

ராணிப்பேட்டை மாவட்டத்தில் காவல்துறை சார்பில் பொதுமக்கள் குறைதீர் கூட்டம் இன்று நடைபெற்றது.

---------------------

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆடி அமாவாசையை முன்னிட்டு வரும் 24 ஆம் தேதி உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

>><><><><<

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

ஆசிய ஜூனியர் ஜூடோ போட்டியில் இந்தியா 5 தங்கம், 4 வெள்ளி, 2 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

சீன தைபேயில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 52 கிலோ எடைப்பிரிவில் சானுவும், 57 கிலோ எடைப்பிரிவில் **Darjada -**வும், 63 கிலோ எடைப்பிரிவில் **Himanshi -**யும், 70 கிலோ எடைப்பிரிவில் **Khaidem** யும் 78 கிலோ எடைப்பிரிவில் **Ishroop** யும் தங்கப்பதக்கம் வென்றனர்.

ஹிமான்சு, கன்வர் பிரித், ஆதித்யா, சீத்தல் வெள்ளிப் பதக்கத்தையும், ஃபர்தீன் மற்றும் அல்பேஷ் வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

-------------

ஆசியக் கோப்பை மகளிர் கூடைப்பந்து போட்டியில் இந்தியா அரையிறுதிக்கான பிளே ஆப் சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

சீனாவின் **Shenzhen-**ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் இன்றைய லீக் ஆட்டத்தில் இந்தியா 78-55 என்ற புள்ளிக் கணக்கில் **Tahita-**ஐ வென்றது.

-----------

ஜப்பான் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் அனுபமா **Upadhyaya** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 21-15, 18-21, 21-18 என்ற செட்கணக்கில் ரக்ஷிதா ஸ்ரீ சந்தோஷ் ராம்ராஜை வென்றார்.

**>> End of News <<**